**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 127/2018**
**வழக்கு சாட்சி – அ.சா. 9**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.A. ராஜேஸ். | ஜாதி | |
| தந்தை பெயர் | அய்யங்காளை. | தொழில் காவல் ஆய்வாளர். | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 42/2025. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.11.2025.

**(2–வது எதிரி ஆஜர். 3 முதல் 6 வரையிலான எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக 355 BNSS – இன் படியான மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, தேனி எஸ்.பி.சி.ஐ.டி.யில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 28.09.2017 – ஆம் தேதி சுமார் 13.15 மணிக்கு பி.சி. பட்டி காவல் நிலையப் பொறுப்பிலிருந்தபோது, கோடாங்கிபட்டியைச் சேர்ந்த அழகர்சாமி மகன் சென்றாயன் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்து மூலமான புகாரினைப் பெற்று, பி.சி. பட்டி காவல் நிலையக் குற்ற எண். 670/2017, சட்டப் பிரிவுகள் 147, 448, 294(b), 323, 506(1) இதச மற்றும் 3 and 4 of Tamilnadu Prohibition of Exorbitant Interest Act ன் படி வழக்குப் பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்பு, அன்றைய தினமே சுமார் 14.15 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான கோடாங்கிபட்டி முளைப்பாரியம்மன் கோவில் தெருவில் உள்ள வாதியின் வீட்டிற்குச் சென்று, அங்கு சாட்சிகளான சந்திரகுமார், ராஜா ஆகியோர்கள்

முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் தனித்தனியே பதிவு செய்தேன். பின்பு, சம்பவ இட சாட்சிகளான 1 முதல் 6 வரையிலான சாட்சிகளையும் தனித்தனியாக விசாரித்து, தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்பு, இவ்வழக்கின் கோப்புக்களை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

அ.சா.ஆ.1 புகாரில் சம்பவம் 27.09.2017– ஆம் தேதி காலை சுமார் 07.15 மணியளவில் நடைபெற்றதாகக் கண்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரானது மறுநாள் 28.09.2017 ஆம் தேதியன்று மதியம் 01.15 மணியளவில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரரின் ஊரிலிருந்து எங்களது காவல் நிலையத்திற்கு சுமார் ½ மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். புகார் சம்பவம் நடைபெற்று, 24 மணி நேரம் கழித்துதான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.4 – இல் புகாருக்கான காலமாதத்திற்கு காரணம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் புகார்தாரரிடம் புகாருக்கான காலதாமதம் குறித்து கேட்டுத் தெரிந்துகொண்டேனா? என்றால் தெரிந்துகொண்டேன், பதற்றத்தினால் காலதாமதம் ஆனது எனக் கூறினார். புகார்தாரர் மீது பி.சி. பட்டி காவல் நிலையத்தில் சட்டத்திற்கு புறம்பாக மணல் திருடியதாக வழக்கு உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. புகார்தாரருக்கு காவல் துறையில் நல்ல செல்வாக்கு உள்ளது என்றால், அது தவறு. புகார்தாரர், 1–வது எதிரி பரமகுருவிடம் கடந்த 07.03.2015 – ஆம் தேதி ரூ.3,00,000/– கடனாகப் பெற்றதும், அதற்கு ஆதரவாக புரோநோட்டு மற்றும் பத்திரம் எழுதிக்

கொடுத்துள்ளார் என்பதை நான் கேட்டுத் தெரிந்துகொண்டேனா? என்றால் கேட்டுத் தெரிந்துகொண்டேன், ஆனால் ஆவணங்களைக் கைப்பற்றவில்லை. 1–வது எதிரி, புகார்தாரரிடம் கொடுத்த கடனை அசல் மற்றும் வட்டியைத் திருப்பிக் கேட்டார் என்றால், அதுபற்றி எனக்குத் தெரியாது, புகாரில் புகார்தாரர் 10 வட்டி கேட்பதாகப் புகார் கொடுத்துள்ளார். எதிரிகள் 10 வட்டி கேட்பதாக, புகார்தாரர் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார்தாரர், 1–வது எதிரியிடம் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கக்கூடாது என்பதற்காக, எதிரிகள் மீது ஒரு பொய்யான புகார் கொடுத்து, இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் மீது கந்துவட்டி கேட்டு பிரச்சனை செய்ததாக வேறு நபர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகாரில் கூறியுள்ளதுபோல், எந்தவித சம்பந்ம நடைபெறவில்லை என்றாலும், புகார்தாரர் கொடுத்த பொய்ப் புகாரின் அடிப்படையில் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2025.11.19 20:23:47 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**